செய்தி வெளியீடு **நாள் : 18.8.2025**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் கொளத்தூர் தொகுதியில் விரைவில் திறக்கப்படவுள்ள ராஜா தோட்டம் தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகள், திரு.வி.க. நகர் மற்றும் பெரியார் நகர் பேருந்து நிலையங்களின் இறுதி கட்டப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு.

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் விரைவில் திறக்கப்படவுள்ள தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகள், சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் திரு.வி.க. நகர் மற்றும் பெரியார் நகர் பேருந்து நிலையங்களின் இறுதிக்கட்டப் பணிகளை இன்று (18.8.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து பெரியார் நகர் நூலகத்தில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் '**முதல்வர் படைப்பகம்**' கட்டிடத்தின் பணிகளையும் மற்றும் கொளத்தூரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் "முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கத்தின்" முன்னேற்றப் பணிகளையும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி.ஸ்ரேயா பி. சிங், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., கொளத்தூர் காவல் துணை ஆணையர் திரு.பி.குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை பொறியாளர் திரு.கிருஷ்ணசாமி, கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு, திரு.இளம்பரிதி, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் திரு.ஐ.சி.எப்.முரளிதரன், திரு.சந்துரு, திரு.மகேஷ்குமார், இணை இயக்குநர் (பொது நூலகம்) திரு.இளங்கோ சந்திரகுமார், மாவட்ட நூலக அலுவலர் முனைவர் மு.கவிதா, மாமன்ற உறுப்பினர்கள் திரு.நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி.அமுதா, திருமதி.ஸ்ரீதணி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RedFlore ™